1979 மார்ச் 13]

படித்துச் சிரித்துக் கொண்டே இருப்பார்கள், அவர்கள் சிரித்துக் கொண்டிருக்க அந்தப் பத்திரிகையை அரசின் சார்பிலே வழங்க ஏற்பாடு செய்யப்படுமா?

THE HON. THIRU K. NARAYANASWAMY : The suggestion will be very seriously considered and I may assure the hon'ble Members of this House that an element of humour in life is very very essential, at least in the life of prisoners also.

திரு. கே. சௌந்திரராசன்: தலைவர் அவர்களே, நான் தான் மூலக் கேள்வி போட்டேன் ....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அப்போது பார்த்தேன்' தாங்கள் இருக்கையில் இல்லை.

சரஸ்வதி மகால் நூல் நிலையம், தஞ்சாவூர்

*வினா எண். 367 திரு. என். கிட்டப்பா திரு. சேலம் மு. ஆறுமுகம் மாண்புமிகு கல்வித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) தஞ்சாவூர் சரபோஜி சரஸ்வதி மகால் நூல்நிலையத்தினைப் பராமரிக்க மத்திய அரசு மானியத் தொகை வழங்கி வருகின்றதா?

(ஆ) ஆம் எனில், அதில் விவரம் யாது?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: (அ) ஆம்

(ஆ) அதன் விவரப்பட்டி * அவை முன்னால் வைக்கப்பட்டது.

திரு என். கிட்டப்பா; தலைவர் அவர்களே, தஞ்சை சரபோஜி சரஸ்வதி மகால் நூல் நிலையத்தைப் பராமரிக்க அதற்கு மத்திய அரசு மானியத் தொகை அளிக்கிறது என்று குறிப்பிட்டார்கள். அதனுடைய பராமரிப்பு மாநில அரசிடத்திலே இருக்கிறதா அல்லது மத்திய அரசினிடத்திலே இருச்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன். மாநில அரசினுடைய பராமரிப்பில் இருந்தால் முறைப்படி அதை மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகளை எடுப்பதுபற்றி அரசு அறிவிக்குமா?

[முற்பகல் 9.40]

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: மாண்புமிகு தலைவரவர்களே, தஞ்சாவூர் மகாராஜா சரபோஜி சரஸ்வதி மகால் நூலகம் 1918 ஆம் ஆண்டு ஏற்படுத்தப்பட்ட அறக் கட்டளையின்படி தஞ்சாவூர் மகாராஜா சரபோஜி சரஸ்வதி மகால் நூலக நிர்வாகக் குழுவினால் நடத்தப்பட்டு வருகிறது.

[* 504ம் பக்கத்தில் இணைப்பு I ஆக அச்சிடப்பெற்றுள்ளது.

இக்குழுவிற்கு தஞ்சை மாவட்ட ஆட்சியர் தலைவர். மேலும் இக்குழுவில் தஞ்சை மாவட்ட நீதிபதி, தஞ்சை மன்னர் குடும்பத்தைச் சார்ந்த ஒருவர், தஞ்சை மன்னர் வாரிசால் நியமனம் செய்யப்பட்ட ஒருவர், தஞ்சை மாவட்ட பொது மக்களின் சார்பில் ஒருவர் ஆகியோர் இடம் பெற்றுள்ளனர்.

திரு. சேலம் மு. ஆறுமுகம்: தலைவரவர்களே, தஞ்சை சரஸ்வதிமகால் நூல் நிலையத்தில் உள்ள அரிய பல நூல்களை இன்றைய தினம் தமிழக அரசு மலிவு விலையில் அச்சிட்டுப் பொதுமக்கள் படிப்பதற்கு வசதி செய்து கொடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவரவர்களே, இந்த நூலகம் தற்போதுள்ள அரிய சிறந்த நூல்களைப் பாதுகாப்பதோடு, அரிய சுவடிகளைப் புத்தகமாக வெளியிட்டுப் பெரிதும் பொது மக்களுக்குப் பயன்பட்டு வருகிறது.

திரு. சோ. அழகர்சாமி: பேரவைத் தலைவரவர்களே, தஞ்சாவூர் சரஸ்வதி மகாலில் இருக்கும் பழங்காலச் சுவடிகளை மைக்ரோ ஃபிலிம் மூலமாக எடுத்துப் பாதுகாத்து வைப்பதற்காக வெளிநாட்டிலேயிருந்து இலட்சம் ரூபாய் செலவு செய்து இயந்திரம் வாங்கப்பட்டு, அது வேலை செய்யாமல், அதற்குரிய ஆட்களை நியமிக்காமல் இருப்பதாகத் தெரிகிறது. இரண்டு மூன்று ஆண்டுகளாக அந்த இயந்திரம் அப்படியே இருக்கிறது. இதனால் அது கெட்டு விடாதா? எனவே உடனடியாக அந்த இயந்திரத்தை இயக்குவதற்கு ஆட்களை நியமிக்க அரசு முன் வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவரவர்களே, அதுகுறித்து நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. செ. இராமலிங்கம்: பேரவைத் தலைவரவர்களே, தஞ்சாவூர் சரஸ்வதி மகால் நூல் நிலையத்தில் டெபுடி லைபரரியன் போஸ்ட் நீண்ட நாட்களாகக் காலியாக இருக்கிறது; அதை உடனடியாக ஃபில் அப் செய்ய அமைச்சரவர்கள் முன் வருவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவரவர்களே, அது குறித்து நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. கோ. இளங்கோவன்: பேரவைத் தலைவரவர்களே, அமைச்சரவர்கள் அச்சடித்துத் தந்துள்ள விடையில் 1974-75ஆம் ஆண்டுக்கு அச்சகம் நிறுவுவதற்கு ரூபாய் 50,000, கட்டடத்தை விரிவாக்குவதற்கும், புத்தகம் கட்டுவதற்கும் ஏறத்தாழ ஒரு இலட்சம் ரூபாயும் மானியம் வழங்கியிருப்பதாகச் சொல்கிறார்கள். அச்சகம் நிறுவி, எத்தனை பிரதிகளை புத்தகமாக இதுவரையில் வெளியிட்டிருக்கிறார்கள் என்பதை அறிவிக்க இயலுமா?

1979 மார்ச் 13]

மாண்புமிகு திரு செ. அரங்கநாயகம் : தலைவரவர்களே, அதுகுறித்து விவரம் இல்லை. தனிக்கேள்வி போட்டால் விவரமாக சொல்லலாம்.

திரு சொ. ந. பழனிசாமி : பேரவைத் தலைவரவர்களே, சரஸ்வதி மகால் நூல் நிலயத்தில் தற்பொழுது எத்தனை நூல்கள் உள்ளன? அவற்றில் இந்திய மொழிகளில் உள்ள நூல்கள் எத்தனை? நூல் நிலையத்தைப் பராமரிக்க தொல்பொருள் இலாக்காவால் என்னென்ன பணிகள் செய்யப்பட்டுள்ளன என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு செ. அரங்கநாயகம் : மாண்புமிகு தலைவர் அவர்களே, இந்த நூலகத்தில் சுமார் 30,000 ஓலைச் சுவடிகள் உள்ளன. அவற்றுள் 24,000 சுவடிகள் வடமொழிகளிலும், ஏனையவை தமிழ், மராட்டி, தெலுங்கு ஆகிய மொழிகளிலும் உள்ளன. மேலும் இந்நூலகத்தில் தஞ்சை மன்னர் சரபோஜி சேர்த்து வைத்த நூற் பிரதிகளும், ஆங்கில நூல்களும் உள்ளன. இங்குள்ள ஓலைச் சுவடிகள், இசை, நாடகம், தத்துவம், மருத்துவம், மற்றும் சமய சார்புடையனவாயுள்ளன. இவைகளைப் பராமரித்து வருகிறோம்.

திரு மு. அம்பிகாபதி: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, சோற்றால் மடை அடைத்த சோழ வளநாட்டின் தலைநகரமாக உள்ள தஞ்சாவூரில் இருக்கின்ற சரபோஜி சரஸ்வதி மகால் பழுதுபட்டும், இருள் அடைந்தும் இருக்கிறதே, அங்கு ஒளி வசதி செய்யவும், பழுது பார்க்கவும் அரசாங்கம் நடவடிக்கைகளை மேற்கொள்ளுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு செ. அரங்கநாயகம்: மாண்புமிகு தலைவர் அவர்களே, 1977-1978-ம் ஆண்டில் 2.5 இலட்சம் ரூபாய் நிதி உதவி அளிக்கப்பட்டிருக்கிறது, 1978-1979-ம் ஆண்டு தொடங்கி அடுத்த ஐந்து ஆண்டுகளுக்கு, இந்நூலகத்தில் சில கூடுதல் பணியிடங்களை ஏற்படுத்துவதற்காகவும் ஏற்கனவே உள்ள சில பணியிடங்களை மேல் நிலைப்படுத்துவதற்காகவும், தொடரும் செலவினமாக ஆண்டுக்கு ரூபாய் 60,000-ம் முதலீட்டுச் செலவினங்களுக்காக ஆண்டொன்றுக்கு ரூபாய் 3.5 இலட்சம் வரை நிதி உதவி அளிக்கும். வருகைக் குழுவின் பரிந்துரைகளை ஏற்பதால் தமிழக அரசுக்குக் கூடுதல் செலவினம் ஏதும் இல்லை. ஏற்கனவே செலவிட்டு வரும் மானியத் தொகையான ரூபாய் 1.25 இலட்சத்தை இனி மேலும் தொடர்ந்து வழங்கி வரும். இந்த அடிப்படையில் அந்த நூலகம் நல்ல முறையிலே பராமரிக்கப்படும்.

திரு. சேலம் மு. ஆறுமுகம்: பேரவைத் தலைவரவர்களே, தஞ்சை சரஸ்வதி மகாலில் அரிய பல வைத்திய நூல்கள் பிற மொழிகளில் இருக்கின்றன. அவைகள் தமிழ் மொழியில் வெளியிடப்

படவில்லை. ஆகவே, மதிப்புமிக்க அந்தப் பிரபலமான பிற மொழியில் இருக்கின்ற நூல்களைச் சிறப்பான முறையில் தமிழில் வெளியிட முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்,

மாண்புமிகு திரு செ. அரங்கநாயகம் : தலைவரவர்களே அது குறித்துப் பரிசீலிக்கலாம்.

Representation from St. Peter's High School Teachers Association

* Q. No. 368 Thiru R.UMANATH: will the Hon. the Minister for Education be pleased to state:

(a) Whether any representation has been received recently from the Teachers Association, St. Peter's High School, Thanjavur, alleging prevention of teachers by management of C.S.I. Schools from exercising their fundamental right to seek any remedy in a court of law; and

(b) if so, the action taken by the Goverment thereon ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவரவர்களே,

(அ) ஆசிரியர் சங்கத்திடமிருந்து எந்தவித முறையீடும் வரவில்லை. ஆனால், சில ஆசிரியர்கள் சில குறைபாடுகளைச் சொல்லி இருக்கிறார்கள்.

(ஆ) அந்த அடிப்படையிலே சில நடவடிக்கைகளை எடுத்து வருகிறோம்.

சென்னை மாநகராட்சிப் பணிகளுக்குத் தேர்வு

* வினா எண். 369— திரு. எஸ். கணேசன் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) சென்னை மாநகராட்சித் துறையில் உள்ள பதவிகளுக்குப் பணியாளர்களைத் தேர்ந்தெடுக்கத் தனியாக சர்வீஸ் கமிஷன் ஒன்றை ஏற்படுத்த அரசு உத்தேசித்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் என்ன?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து:

(அ) இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.